அறிக்கைகளைக் குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கின்றேன். நண்பர் ஞானசேகரன் அவர்கள் சொன்னதைப்போல, இந்த ஆண்டு பொதுக் கணக்குக் குழு, century அடித்திருக்கிறது.

முற்பகல் 11-55

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி.*

திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-2002 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தி மூன்று முதல் ஐம்பது வரையிலான எட்டு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

(இ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மனுக்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. பி.எம். நரசிம்மன்.*

திரு. பி.எம். நரசிம்மன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2001-2002 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் ஏழு மற்றும் எட்டாவது அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) குற்ற வழக்கு விசாரணைமுறைத் தொகுப்பு (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 2002 ஆம் ஆண்டு குற்ற வழக்கு விசாரணைமுறைத் தொகுப்பு (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS